# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 21 வெள்ளிக்கிழமை 06.09.2024 கதிர் 354




# ‘ரணிலை அறிந்துகொள்வோம்’ பிரசார நிகழ்ச்சி நாளை ஆரம்பம்

## நாடு முழுவதையும் உள்ளடக்கியதாக முன்னெடுக்க திட்டம்

சுயேட்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் ‘ரணிலைஅறிந்துகொள்வோம்‘ எனும் பிரச்சார நிகழ்ச்சி நாடளாவிய ரீதியில்நாளை காலை 8.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

09 மாகாணங்கள், 160 தேர்தல் தொகுதிகள், 341 உள்ளூராட்சிமன்றங்கள், 4,984 வட்டாரங்கள், 14,026 கி.உ. பிரிவுகள்மற்றும் 53,896 கிராமவீதிகளை உள்ளடக்கிய இந்தநிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக, அரசியல், சமூகமற்றும் கலாசாரரீதியில் ரணில் விக்ரமசிங்கவின் பாத்திரத்தை மக்களுக்கு அறிந்துகொள்ளவாய்ப்பளிக்கப்படும்.

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலுக்கான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ‘இயலும் ஸ்ரீலங்கா’ விஞ்ஞாபனத்தின் உள்ளடக்கம் அடங்கியதுண்டுப் பிரசுரங்கள் விநியோகம் மற்றும் மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இதன்கீழ் ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

மீண்டும்வரிசையில் நிற்கும்யுகத்தை எதிர்கொள்ளாத வகையில் பொருளாதார ஸ்திரத்தன்மை கொண்டநாட்டில் மக்களின் எதிர்பார்ப் புகளையும் நம்பிக்கையையும்



ஒருங்கிணைக்கும் இந்தப் பிரச்சாரத்தில் இணையுமாறு அனைத்துத் தரப்பினருக்கும் கௌரவமாக அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

# அநுர குமார ஜனாதிபதியாவதையே ரணில் விக்கிரமசிங்க விரும்புகிறார்

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக வேண்டும் என்பதே ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்பார்ப்பு என்பது அவர் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் ஆற்றிய உரையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உண்மையான ஐக்கிய தேசிய கட்சியினர் என்னிடமே உள்ளனர். எனவே அவர்கள் எனக்கே வாக்களிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மினுவாங்கொடையில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் 7 ➤



# நாகை காங்கேசன்துறை கப்பல் சேவை நிறுத்தம்

நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணத்தில் ஈடுபடும் கப்பலானது இன்று வெள்ளிக்கிழமை பயணத்தில் ஈடுபடவில்லை.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இந்த கப்பல் சேவையானது உத்தியோப்பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் இன்றைய தினம் காலை நாகைப்பட்டினத்தில் இருந்து புறப்பட்டு காங்கேசன்துறையை குறித்த கப்பல் வந்தடைந்தது.

இவ்வாறு வந்த கப்பலானது காங்கேசன்துறையில் இருந்து நாகை பட்டினத்திற்கான பயணத்தை ஆரம்பிப்பதற்கு தயாரானது. பயணிகளும் கப்பலில் ஏறி பயணத்திற்கு தயாராக இருந்தனர்.

இருப்பினும், கப்பலில் போதிய அளவுளிபொருள் இன்மையினால் குறித்த பயணமானது இடைநிறுத்தப்பட்டது. இந்நிலையில் பயணத்திற்கு தயாராக இருந்த பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

# ஜனாதிபதியாக தெரிவானால் 4 பேர் கொண்ட அமைச்சரவை

## அநுரகுமார திசநாயக்க அறிவிப்பு



ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதும் பாராளுமன்றத்தை கலைப்பேனெனவும் புதியநாடாளுமன்றம் தெரிவுசெய்யப்படும் வரைநாட்டைஎவ்வாறுஆட்சிசெய்யமுடியும் என்பது தொடர்பில் மூன்றுதெரிவுகள்உள்ளனவெனவும் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் அனுரகுமார திசநாயக்க ஜா - எல தேர்தல் பிரச் சார கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

எந்த வழிமுறையை நடைமுறைப் படுத்தினாலும் தேசிய மக்கள் சக்தி அரசியலமைப்பின்படி இடைக்கால அரசாங்கத்தை ஏற்படுத்துமெனவும் 2020 இல் மக்கள் வழங்கிய 7 ➤

# 4 ஜனாதிபதி வேட்பாளர்கள் பங்கேற்கும் விவாதம் நாளை

» சஜித், நாமல், திலித், அரியம் பங்கேற்பு
» கொழும்பிலிருந்து நேரடியாக ஒளிபரப்பு



மார்ச் 12 இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொது விவாத மேடைக்கு வருவதற்கு 16 ஜனாதிபதி வேட்பாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக 7 ➤

**- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -**

# இனப் படுகொலை கல்வி வாரச் சட்டம் கனடிய அரசியலமைப்புக்கு உட்பட்டது

## அந்த நாட்டு மேன்முறையீட்டு நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு



கனடாவின் மேல்முறையீட்டு நீதிமன்றம் தமிழ் இனப்படுகொலை கல்வி வாரச் சட்டத்திற்கு எதிராக இலங்கையை சேர்ந்த குழுக்கள் தாக்கல் செய்த மனுவை நிராகரித்துள்ளதுடன் இனப்படுகொலை கல்வி வாரச்சட்டம் கனடாவின் அரசமைப்பிற்குட்பட்டது என தெரிவித்துள்ளது.

கனடா நீதிமன்றம் இனப்படுகொலை கல்விவாரச்சட்டம் கனடாவின் அரசமைப்பிற்கு உட்பட்ட விடயம் என தெரிவித்ததை தொடர்ந்து இலங்கை கனடா செயற்பாட்டு கூட்டமைப்பு என்ற அமைப்பு இதற்கு எதிராக மேல்முறையீடு செய்திருந்த நிலையிலேயே மேல்முறையீட்டு நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

கனடா அரசாங்கம் தனது அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட விதத்தில் செயற்படுகின்றது, கருத்து சுதந்திரம் சமத்துவ உரிமைகளை மீறுவதாக தெரிவித்திருந்த இலங்கை அமைப்பு தமிழ் இனப்படுகொலை குறித்த மாற்றுக்கருத்துக்களை முடக்குவதற்காக இந்த சட்டம் பயன்படுத்தப்படும் என தெரிவித்திருந்தது.

எனினும் அந்த அமைப்பின் வேண்டுகோளை நிராகரித்துள்ள ஒன்ராரியோ மேல்முறையீட்டு நீதிமன்றம் இனப்படுகொலை கல்விவாரச்சட்டம் கனடாவின் அரசமைப்பிற்குட்பட்டது அது பாரபட்சமான தாக்கங்களை ஏற்படுத்தாது என தெரிவித்துள்ளது.

இந்த சட்டம் சிங்கள பௌத்தர்களிற்கு எதிரான வெளிப்படையான இனவேறுபாட்டை கொண்டுள்ளது என திருஹேவகே சமர்ப்பித்துள்ளதை நாங்கள் நிராகரிக்கின்றோம், என கனடாவின் மேல்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த சட்டத்தின் முன்னுரையில் இலங்கை அரசாங்கத்தின் இனப்படுகொலை கொள்கைகள் என குற்றம்சாட்டப்படும் கொள்கைகள் சிங்கள பௌத்த மையப்படுத்தப்பட்டவை என்றே குறிப்பிடப்படுவதாகவும், சிங்கள பௌத்தர்கள் ஒரு இனக்குழுவாக அதற்கு பொறுப்பாளிகள் என தெரிவிக்கவில்லை எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# ஊவா மாகாணத்திற்கு புதிய ஆளுநர் நியமனம்



ஊவா மாகாணத்தின் புதிய ஆளுநராகக் அனுர விதானகமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊவா மாகாணத்தின் ஆளுநராக கடமையாற்றிய ஏ.ஜே.எம். முஸம்மில் பதவி விலகியமை காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்கு அனுர விதானகமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் ஏ.ஜே.எம். முஸம்மில் ஆளுநர் பதவியை நேற்று(05.06) இராஜினாமா செய்திருந்தார்.




# மாயமான 4 மாணவர்களும் ராகம பகுதியில் கண்டுபிடிப்பு

நுவரெலியா, நோர்வூட் வென்சர் தோட்டத்தில் வசிக்கும் நான்கு பாடசாலை மாணவர்கள் கடந்த 4 ஆம் திகதியிலிருந்து காணாமல்போயிருந்த நிலையில் ராகம பிரதேசத்தில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

தரம் 10 இல் கல்வி கற்கும் 15 வயதுடைய நான்கு பாடசாலை மாணவர்களே இவ்வாறு காணாமல்போயிருந்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இந்த மாணவர்கள் நால்வரும் கடந்த 4 ஆம் திகதி புதன்கிழமை வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ள நிலையில் மீண்டும் வீடு திரும்பாமல் இருந்துள்ளனர்.

பின்னர், காணாமல்போன மாணவர்களின் பெற்றோர்கள் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் காணாமல்போன மாணவர்கள் நால்வரும் ராகம பிரதேசத்தில்வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்கள் நால்வரும் வேலைவாய்ப்பு தேடி ராகம பிரதேசத்துக்குச்சென்றுள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, மாணவர்கள் நால்வரும் ராகம பொலிஸாரின் தலைமையில் அவர்களது பெற்றோர்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று நோர்வூட் பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# எம்மிலிப்பிட்டிய பிரதேச சபைக்கு போட்டியிட 'மொட்டு' கட்டுப்பணம்

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலுக்கான அட்டவணையைக் கடந்த மாதம் 26ம் திகதி தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டிருந்தது.

அதற்கமைய ஆகஸ்ட் 26ம் திகதி முதல் செப்டெம்பர் 11ம் திகதி வரை கட்டுப்பணம் ஏற்றுக் கொள்ளப்படும் எனவும், செப்டெம்பர் 9ம் திகதி முதல் 12ம் திகதி வரை வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

எல்பிட்டிய பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் நான்காவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டதையடுத்து, பிரதேச சபையின் பதவிக்காலம் கடந்த மார்ச் மாதம் 6ம் திகதியுடன் நிறைவடைந்தது.

இருப்பினும் சிறப்பு வர்த்தமானியின் ஊடக எதிர்வரும் நவம்பர் 4ம் திகதி வரை எல்பிட்டிய பிரதேச சபை உறுப்பினர்களின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டது.

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV
YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# யாழ். நகரில் களமிறங்கிய பொதுக் கட்டமைப்பினர்







பொலிகண்டி முதல் பொத்துவில் வரை முன்னெடுக்கப்பட்டு வரும் 'நமக்காக நாம்' பிரசார பயணத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் இன்றைய தினம் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலைய பகுதியில் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பினர் பரப்புரை நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.

இன்று வெள்ளிக்கழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமான பரப்புரை நடவடிக்கையில் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

## மாங்குளம் பகுதியில் கண்ணிவெடி நான்கு பணியாளர்கள் படுகாயம்




முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம்-துணுக்காய் பகுதியில் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் நால்வர் கண்ணிவெடி விபத்தில் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த வெடிவிபத்தில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும்பணியில் ஈடுபட்டிருந்த நான்கு பெண் பணியாளர்களே படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் 43, 40, 39 வயதுடையவர்கள் என்பதுடன் இவர்களில் மூவர் மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்களுக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

## திலகரின் தேர்தல் கொள்கை நாளைய தினம் வெளியீடு



மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் ஜனாதிபதி வேட்பாளருமான மயில்வாகனம் திலகராஜாவின் தேர்தல் கொள்கைப் பிரகடனம் நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நுவரெலியா, வட்டகொட, மடகொம்பரை, புதுக்காடு தோட்டத்தின் ஐந்தாம் இலக்க லயன் அறையில் வெளியிடப்பட உள்ளதாக அரங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுரேஷ்குமார் ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

அர்த்தமுள்ள பிரஜைகள் எனும் தலைப்பில் தேசிய, மலையக விடயப்பரப்புகளை உள்ளடக்கியதான இரண்டு பாகங்களைக் கொண்ட இந்தக் கொள்கை அறிக்கை மூன்று மொழிகளிலும் உள்ளடக்கங்ளைக் கொண்டுள்ளது.

மலையக மண்ணில் இடம்பெறும் வெளியீட்டை அடுத்து 9 ஆம் திகதி கொழும்பு சர்வதேச பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறும் பகிரங்க விவாத மேடையிலும், 10 ஆம் திகதி அரசாங்க ஊடகத் தகவல் நிலையத்தில் இருந்து நேரலையாக நாட்டு மக்களுக்கும் திலகரினால் இந்த கொள்கை பிரடகனம் முன்வைக்கப்படும் எனவும் சுரேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

## மகாஜனா - ஸ்கந்தவரோதய சமர் நாளை ஆரம்பமாகிறது

'வீரர்களின் போர்' என வருணிக்கப்படும் மாபெரும் கிரிக்கெட் சமரில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியும் 22 ஆவது தடவையாக மோதவுள்ளன.

இப்போட்டி தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி மைதானத்தில் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரண்டு தினங்களில் நடைபெறவுள்ளது. இப் போட்டிக்கான வெற்றிக் கிண்ணத்தை அறிமுகப்படுத்தும் வைபவமும் ஊடக சந்திப்பும் நடைபெற்றது.

இதில் இரண்டு கல்லூரிகளினது அதிபர்களும் அணிகளின் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

இரண்டு அணிகளுக்கும் இடையில் இதுவரை நடைபெற்றுள்ள 21 போட்டிகளில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி ஐந்து தடவைகளும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி நான்கு தடவைகளும் வெற்றி பெற்றுள்ளன. 12 போட்டிகள் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்துள்ளது.



# நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வட பகுதி மக்களிடம் மாற்றம் தேவை

## யாழ். வந்த அநுரகுமார திசநாயக்க தெரிவிப்பு



“இன்று ஆட்சி மாற்றம் தொடர்பில் மக்கள் சிந்திக்க ஆரம்பித்துள்ளனர். இந்த தேர்தலில் மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும் என்று மக்கள் சிந்திக்கின்றனர். அவ்வாறான மாற்றத்தை உருவாக்க வேண்டும். அதற்கு விசேடமாக வடக்கில் உள்ள மக்களிடம் மாற்றம் ஏற்பட வேண்டும்” என்று வடமாகாணத்தில் தன்னுடைய தேர்தல் பரப்புரையை ஆரம்பித்த தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசநாயக்க தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுக் காலை தன்னுடைய பரப்புரையை ஆரம்பித்த அநுரகுமார திசநாயக்க, நண்பகல் கிளிநொச்சியிலும், பிற்பகல் யாழ்ப்பாணத்திலும் ஏற்பாடு செய்யப்பட்ட பரப்புரைக் கூட்டங்களில் உரையாற்றினார். அவரது கூட்டங்களில் கணிசமான மக்களைக் காணமுடிந்தது.

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய அநுரகுமார திசநாயக்க, “தமிழ் மக்கள் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவினை முழுமையாக வழங்கிய போதிலும் அவரால் வெற்றிபெற முடியவில்லை. பின்னர் கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக வாக்களித்தீர்கள் ஆனாலும் அதிலும் அரசாங்கத்தை வெற்றி கொள்ளமுடியவில்லை” என்று தெரிவித்ததுடன், “எனவே இந்த முறை தேசிய மக்கள் சக்திக்கு இம்முறை வாக்களியுங்கள் என்று உங்களிடம் கேட்கின்றோம்” என்று வேண்டுகோள் விடுத்தார்.

“செப்டம்பர் 21ஆம் திகதி தேர்தல் நடக்கவுள்ளது. தென்பகுதியை போன்று இங்கு தேர்தல் சூடுபிடிக்கவில்லை. ஆனாலும் 21 ஆம் திகதி நாட்டுக்குரிய தலைவரே தெரிவு செய்யப்படவுள்ளார்” என்று தெரிவித்த அநுரகுமார, “உங்களின் எதிர்காலத்திற்கும் உங்கள் வாழ்க்கைக்கும் செப்டம்பர் 21 எடுக்கும் தீர்மானம் பெரும் தாக்கத்தை செலுத்தும்” என்றும் குறிப்பிட்டார்.

“கடந்த தேர்தலில் கோதாபய ராஜபக்ஷவை தோற்கடிக்க வாக்களித்தீர்கள். ஆனால் அவர் தோற்கவில்லை” என்றும், “2015 தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்காகவே வாக்களித்தீர்கள். ஆனால் அந்த 5 வருட ஆட்சியில் நாடு பாரிய சீர்குலைவுக்கு உள்ளாகியது. அந்தக் காலப்பகுதியில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் சஜித் பிரேமதாச அமைச்சராகவும் இருந்தார். அவர்கள் வடக்கிற்கும் தெற்கிற்கும் வழங்கிய வாக்குறுதிகளை செய்யவில்லை” என்றும் சுட்டிக்காட்டினார்.

“எதிர்வரும் செப்டம்பர் 21ஆம் திகதி ஏமாற்று அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மக்கள் இப்போது மாற்றத்தையே எதிர்பார்க்கின்றனர்” என்று குறிப்பிட்ட அநுரகுமார திசநாயக்க, “இங்குள்ள மக்கள் மாற்றத்திற்கான தேசிய மக்கள் சக்தியை தெரிவு செய்யப் போகின்றனரா, அல்லது, பழைய பயணத்தை தொடரும் சஜித், ரணிலை தெரிவு செய்வதா? நீங்கள் எந்த பாதையை தெரிவு செய்யப்போகின்றீர்கள்?” என்றும் கேள்வி எழுப்பினார்.

“ராஜபக்ஷ ஆட்சி இனவாதத்திற்குள் நாட்டை தள்ளியது. மொட்டுக் கட்சியே இனவாத முகாமாக இருந்தது. அவர்கள் இப்போது எங்கே இருக்கின்றனர். ரணில் பக்கம் ஒரு பிரிவினரும், சஜித் பக்கம் இன்னுமொரு பிரிவும் நாமல் பக்கம் எஞ்சியவர்களும் இருக்கின்றனர். அங்கே புதியதாக எதுவும் இல்லை. இனவாத குழுவாக இருந்தவர்கள் மூன்று இடங்களில் இருக்கின்றனர். ஆனால் எப்போதும் இனவாதத்திற்கு எதிராக இருந்தவர்கள் தேசிய மக்கள் சக்தியே. புதிய பாதையான இன ஒற்றுமை பாதையிலேயே நாங்கள் இருக்கின்றோம்” என்றும் அநுரகுமார தெரிவித்தார்.

# எனது வெற்றிக்காக அல்ல! இனத்தின் வெற்றிக்காகவே போட்டியிடுகிறேன்

## அரியநேத்திரன் வவுனியாவில் அறிவிப்பு



“கடந்தகால இன்னல்களை தீர்ப்பதற்கான இலக்காகவும் அடையாளமாகவும் இந்த தேர்தல் இருக்கும்” என்று தெரிவித்துள்ள தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன், “தேர்தலின் பின்னர் தமிழரசுக் கட்சியுடன் மாத்திரமே பயணிப்பேன்” எனவும் கூறியிருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அமக்களின் அபிலாஷைகளையும், பிரச்சினைகளையும் வெளிப்படுத்துவதற்காக களமிறக்கப்பட்டுள்ள அரியநேத்திரன் வடபகுதியில் தனது பரப்புரைகளை மேற்கொண்டுவருகின்றார். “நமக்காக நாம்” என்ற தேர்தல் பரப்புரைப் பணிக்காக நேற்று வவுனியாவிற்கு விஜயம்செய்த அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

“தமிழ் மக்கள் நல்ல உத்வேகத்துடன் இருக்கின்றார்கள். சங்கு சின்னத்துக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்துவிட்டார்கள்” என்றும் தெரிவித்த அரியநேத்திரன், “கடந்த எட்டு ஜனாதிபதிகளாலும் நாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றோம், பல துன்பங்களை சந்தித்திருக்கின்றோம்” என்றும், “இந்த தேர்தல் என்பது நான் வெற்றி பெறுவதற்கானதல்ல. இனம் வெற்றி பெறவேண்டும் என்பதுவே எனது இலக்கு” என்றும் தெரிவித்தார்.

தமிழினத்தின் அடையாளமாகவே தான் தேர்தல்களத்தில் தமிழ்ப் பொதுக் கட்டமைப்பின் சார்பில் நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்த அரியநேத்திரன், “எனது சின்னத்துக்கு வாக்களிக்கும் ஒவ்வொருவரும் உங்களுக்கு நீங்களே வாக்களிப்பதாகவே அர்த்தம்” என்றும் குறிப்பிட்டார்.

“கடந்தகால இன்னல்களை தீர்ப்பதற்கான இலக்காகவும் அடையாளமாகவும் இந்த தேர்தல் இருக்கும். இந்ததேர்தலின் முடிவுகள் சர்வதேசத்தின் மனச்சாட்சியை நிச்சயம் உறுத்தும். இந்தியாவிற்கும் ஒரு செய்தியினை சொல்லும்” என்று தெரிவித்த அரியநேத்திரன், “தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையினை வழங்கவேண்டும் என்று அரசையும் வலியுறுத்தும்” என்றும் தெரிவித்தார்.

“கடந்த காலங்களில் பலபோராட்டங்களை தமிழினம் கண்டுள்ளது. இதுபுள்ளடி போடும் ஒரு போராட்டம். அனைவரும் இந்த பணியினை உறுதியுடன் செய்யவேண்டும்” என்று கோரிக்கை விடுத்த அரியநேத்திரன், “அத்துடன் தேர்தலின் பின்னரும் நான் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் மாத்திரமே பயணிப்பேன். அதில் மாற்றுக் கருத்தில்லை” என்றும், “கட்சியால் என்னிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. சந்தர்ப்பம்வரும் போது அதற்கான விளக்கத்தினை அவர்களுக்கு வழங்குவேன்” என்றும் தெரிவித்தார்.

# புலம்பெயர் தொழில் பாதுகாப்பு கிராம மட்டத்தில் விழிப்புணர்வு



(நூருல் ஹுதா உமர்)

*பாதுகாப்பான புலம்பெயர் தொழில் மற்றும் ஆட்கடத்தலுக்கு உள்ளாதல் தொடர்பான விழிப்புணர்வு வேலைதிட்டத்தை மனித அபிவிருத்தி தாபனத்தின் அனுசரனையில் இலங்கையில் ஆட்கடத்தலை எதிர்த்து சமூதாய நியாயபிரசாரம் எனும் செயற்பாட்டினூடாக கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர், கல்முனை, காரைதீவு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.*

*விழிப்புணர்வு நிகழ்வுகளுக்கு கிராம மட்டங்களில் பிரச்சினைக்கு உட்பட்டவர்கள், கிராம மட்ட தலைவர்கள் மற்றும் பெண்கள் என பலரும் பங்குபற்றினர்.*

*மனித அபிவிருத்தி தாபன அம்பாறை மாவட்ட பிரதி இணைப்பாளர் எம்.ஐ. றியாழின் நெறிப்படுத்தலில் நடைபெற்றுவரும், இவ் விழிப்புணர்வு செயற்பாடுகளில் குறித்த பிரதேச செயலகத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வளவாளர்களாக கலந்து கொண்டு பாதுகாப்பான புலம்பெயர் தொழில் மற்றும் ஆட்கடத்தலுக்கு உள்ளாதல் தொடர்பாக மக்களை விழிப்பூட்டி தெளிவுபடுத்தி வருகின்றனர்.*

# சர்ச்சைக்குள் தமிழரசு கட்சியின் முடிவு!

**எஸ்.கிருஷ்ணகுமார்**

ஜனாதிபதி தேர்தலில் ஜக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசாவை ஆதரிப்பதற்கு தமிழரசுக் கட்சியை எடுத்துள்ள முடிவு அரசியலில் கடுமையான வாதப் பிரதி வாதங்களை ஏற்படுத்தியிருக்கிறது. வவுனியாவில் நடைபெற்ற தமிழரசு கட்சியின் மத்திய குழுவின் விசேட கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இதன் பின்னணியில் இருந்து செயற்பட்டவர் சுமந்திரன் என்பதில் சந்தேகம் இல்லை.

என்ன அடிப்படையில், எதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டது என்ற கேள்விக்கு இன்று வரையில் தமிழரசு கட்சியின் சார்பில் யாருமே தெளிவான பதிலை கூறவில்லை. தமிழரசுக் கட்சிக்குள் உருவாகியிருந்த பிளவுகளையும் இது தீவிரப்படுத்தியுள்ளது.



தமிழ் தேசிய அரசியலில் உள்ள அனைத்துக் கட்சிகளும் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவை ஏற்கனவே அறிவித்திருந்தன. ஆனால் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை அதில் ஏற்பட்டிருந்த பிளவுகளும், அதில் ஒரு தரப்பினர் தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கே ஆதரவை வழங்க வேண்டும் என்று தீர்மானித்திருந்ததும் உடனடியான தீர்மானம் ஒன்றை தமிழரசு கட்சியால் எடுக்க முடியாமல் போனமைக்கு காரணடாக இருந்தது.

பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவந்த பின்னர் அவற்றை ஆராய்ந்து அதில் யாராவது சமஸ்டிக்கு சமமான யோசனைகளையும் முன்வைக்கின்றார்களோ அவர்களை ஆதரிப்பது என்ற முடிவை தமிழரசுக் கட்சி எடுக்கும் என்று சுமந்திரன் ஏற்கனவே கூறியிருந்தார்.

இந்த நிலைமையில் ரணில், விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாசா, அநுரகுமார திசநாயக்க ஆகியோரின் தேர்தல் விஞாபனங்கள் வெளிவந்துள்ளன. தமிழ்ப் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் கடந்த திங்கட்கிழமை வெளிவர இருந்த நிலைமையில், ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் கூடிய தமிழரசு கட்சியின் மத்திய குழு அவசரமாக தன்னுடைய முடிவை அறிவித்தது.

சஜித் பிரேம தாசாவை ஆதரிப்பது என்ற அவர்களது முடிவுக்கு என்ன காரணம் என்பது தெளிவாக கூறப் படவில்லை. பிரதா னமான மூன்று வேட்பாளர்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்ததன் அடிப் படையில் தான் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக சுமந்திரன் கூறியி ருக்கின்றார். ஆனால் சஜித் பிரேமதாசாவின் அறிக்கையில் அவ்வாறு என்ன விடயம் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஆரோக்கியமானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை சுமந்திரன் விளக்கவில்லை.

அதனை விட இந்தத் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து தமிழரசுக் கட்சியின் முடிவை எடுப்பதற்கு யார் பொறுப்பாக இருந்தார்கள் என்பதையிட்டும் அவர் எதுவும் தெரிவிக்கவில்லை. கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கூட இது குறித்து தனக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்ற கருத்தைத்தான் முதலில் தெரிவித்திருந்தார். 24 மணி நேரத்துக்குள் அவர் தனது முடிவை மாற்றிக்கொண்டார் என்பது வேறு விடயம்!

இதன் மூலம் ஒரு விடயம் மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. அதாவது, இது தமிழரசுக் கட்சியின் முடிவு என்பதைவிட, இது சுமந்திரனின் தனிப்பட்ட முடிவு என்பதுதான் அது!

சஜித் பிரேமதாசாவுக்கு தமிழரசு மட்டும் ஆதரவை வெளிப்படுத்தவில்லை. பல முஸ்லிம் கட்சிகள், மலையகக் கட்சிகள், வடக்கு கிழக்கு தளமாகக் கொண்டுள்ள சிறிய தமிழ் கட்சியில் பலரும் கூட அவருக்கு ஆதரவை தெரிவித்து இருந்தனர். அவ்வாறு ஆதரவை தெரிவிக்கும் போது, அது தொடர்பாக சஜித் பிரேமதாசாவுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி, அது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கைகளையும் கையொப்பமிட்ட பின்னரே ஆதரவை அவர்கள் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார்கள்.

ஆனால் தமிழரசு கட்சி மட்டும் எந்த ஒரு பேச்சு வார்த்தைகளையும்நடத்தாமல்புரிந்து உணர்வுடன்படிக்கை எதுவும் செய்யப்படாமல் தங்களுடைய ஆதரவை பகிரங்கமாக அறிவித்திருக்கின்றது. அதாவது ஒரு வெற்றுக்காசோலையில் கையொப்படிடுவதைப் போல!

தமிழரசு கட்சியின் இந்த அவசர முடிவுக்கு என்ன காரணம் என்று கேள்வி பலராலும் முன் வைக்கப்படுகின்றது.

தொடர்ச்சி மறுபக்கம்.....



# சட்டவிரோத மணல் அகழ்வு பொலிஸார் சுற்றி வளைப்பு



தருமபுரபோலீஸ்பிரிவுக்குஉட்பட்ட புளியம் பொக்கனை வண்ணாத்தி ஆறு பகுதியின் காட்டுப் பகுதியில் இயற்கை வளங்களை அழித்து அப்பகுதியில் சட்ட விரோதமான முறையில் பல அடி தாளத்திற்கு தோண்டப்பட்டு அப்பகுதியில்இருந்து மணல்களை சட்டவிரோதமான முறையில் இரவு வேலைகளில் வெளி மாவட்டத்திற்கு எடுத்துச் செல்வதாக தருமபுர போலீசாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைவாக இன்று தருமபுரபோலீசார் அப்பகுதியில் சென்று அங்கு சட்டவிரோதமான முறையில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த 15 க்யூ பூக்கும் அதிகமான மணலினை கையகப்படுத்தியுள்ளர்.

அப்பகுதியில் உள்ள மணலினை அங்கிருந்து தருமபுர போலீஸ் நிலையம் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் இச்சம்பவத்தில் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்யும் நடவடிக்கையில் போலீசார் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர். (113)

# நள்ளிரவில் மடத்தடி மீனாட்சி ஆலயத்தில் யானை தாக்குதல்



(வி.ரி.சகாதேவராஜா)

நிந்தவூர் பிரதேசத்திற்குட்பட்ட மாட்டுபளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம் யானைத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

இச்சம்பவம் இன்று வெள்ளிக் கிழமை அதிகாலை நடுநிசியில் இடம்பெற்றுள்ளது.

நடுநிசியில் ஆலயவளாகத்தினுள் புகுந்த யானை அங்கிருந்த களஞ்சியசாலையை தும்பிக்கையால் உடைத்துள்ளது.

அங்கிருந்த கிடாரம் சட்டி பானை பீங்கான்கள் எல்லாம் சேதமடைந் துள்ளதுடன்

கட்டடம் பாவிக்கமுடியாதளவிற்கு வெடித்துள்ளது. யானைகளால் வேளாண்மை அறுவடை முடிந்த பின்னர் அடிக்கடி இவ்வாறு சேதமேற் பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.







# சர்ச்சைக்குள்...

முன் பக்கத் தொடர்ச்சி...

கடந்த வாரம் கொழும்பு வந்த இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் பல கட்சிகளையும் சந்தித்திருந்தார். நான்கு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களுடனும் பேச்சுக்களை நடத்தி, அவர்களுடைய அணுகுமுறைகளை நாடி பிடித்துப் பார்த்தார்.

தமிழ்த் தேசியக் கட்சிகளுடனும் அவர் பேசினார்.

இந்தப் பேச்சுக்களின் தொடர்ச்சியாகவே தமிழரசுக் கட்சி தமது முடிவை அறிவித்தது.

“வெற்றி பெறக் கூடிய, நீங்கள் எதிர்காலத்தில் பேச்சு வார்த்தை நடத்தக்கூடிய ஒவருக்கு உங்களுடைய ஆதரவை வெளிப்படுத்துங்கள்” என்று இந்திய தரப்பு சொன்னதாக ஒரு தகவல் உள்ளது. காலம் தாழ்த்தாது இந்த முடிவை அறிவிக்க வேண்டும் எனவும் இந்திய தரப்பு கூறி இருந்ததாக தகவல்.

கடந்த காலங்களில் தேர்தல் இடம் பெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னர்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை அதன் தலைவராக இருந்த சம்பந்தன் அறிவித்திருக்கின்றார். அந்த வகையில் தேர்தலுக்கு ஒரு வாரம் இருக்கும் நிலைமையில் தங்களுடைய முடிவை அறிவிக்கலாம் என்று ஒரு நிலைப்பாட்டில் தான் தமிழரசுக் கட்சியும் இருந்ததாக கூறப்படுகின்றது. இருந்தபோதிலும் இந்திய பாதுகாப்பு ஆலோசகரின் வருகை, அவர் நடத்திய பேச்சுக்கள் என்பன தமிழரசு தன்னுடைய நிலைப்பாட்டை அவசரமாக அறிவிக்கத் துண்டியதாக தமிழ் அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

வவுனியாவில் நடைபெற்ற கூட்டத்தில் சஜித் பிரேமதாசாவை ஆதரிக்க வேண்டும் என்ற கருத்துக்கு 25 பேர் ஆதரவளித்தனர். பொது வேட்பாளருக்கு ஆறு பேருடைய ஆதரவு இருந்தது. மூன்று பேர் கருத்துக்களை தெரிவிக்கவில்லை.

தமிழரசு கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும் வடமாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் இந்த தேர்தலில் தமிழரசு கட்சி எந்த நிலைப்பாட்டையும் அறிவிக்காமல் மக்கள் தாங்களாகவே தீர்மானிக்கலாம் என்று முடிவை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தார். இருந்தபோதிலும் சுமந்திரன் தரப்பு அதனை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டதாக தெரிகின்றது.

தீர்மானம் அவசரமாக நிறைவேற்றப்பட்டதன் பின்னணியில் இடம் பெற்ற அரசியல் நிகழ்வுகள் இவைதான்.

தமிழ் மக்களுடைய கருத்துக்களை கவனத்தில் எடுக்காமல், ஜனாதிபதி வேட்பாளர்களால் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் அறிக்கைகளை நுணுக்கமாக ஆராயாமல் தமிழரசு கட்சியை இந்த முடிவை எடுத்துள்ளது.

தமிழரசுக் கட்சி இந்த முடிவை எடுத்த போது சஜித் யாழ்ப்பாணத்தில் பரப்புரைகளை முன்னெடுத்துக்கொண்டிருந்தார். அவருக்கு ஊடகவியலாளர் ஒருவர் இதனை தொலைபேசியில் சொன்னபோது, அவர் ஆச்சரியப்பட்டார். செய்தி உண்மையா, என்பதை உறுதிப்படுத்துங்கள் என்று அவர் கேட்டுக்கொண்டதாகவும் தெரிகின்றது. ஏனெனில் அந்த செய்தியை அவர் நம்பவில்லை. காரணம், தமிழரசுக் கட்சியுடன் அவர் இது தொடர்பாக பேசவும் இல்லை, அவர்களுக்கு எந்த வாக்குறுதிகளைக்

# இரு வயலின் இசை





மிருதங்க வித்துவான் பிரம்ம ஸ்ரீ 65 சுவாமிநாதன் சர்மாவின் 'இசை அர்ச்சனை' குழுவினர் யாழ். 'நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தின் போது 31 ஆகஸ்ட் 2024 அன்று நல்லூர், துர்க்காதேவி மணிமண்டபத்தில்நிகழ்த்திய "சிறப்பு இரு வயலின்இசையினை செல்வி வாசு, சுவாமிநாதன் சர்மா மற்றும் செல்வி. நந்தினி சுவாமிநாதன் சர்மா இருவரும் எல்லோரும் பாராட்டும்படி சிறப்பாக வழங்கி இருந்தனர். இந்நிகழ்ச்சியில் அணிசெய்கலைஞர்களாக மிருதங்கம்-மிருதங்க வித்துவான் பிரம்மஸ்ரீ AGS சுவாமிநாதன்சர்மாமற்றும்'மிருதங்ககலாவிததகர்'5. அரவிந்தன்சுப்ரமணியம்சர்மா, கஞ்சிரா: 'மிருதங்க கலாவித்தகர்' 5. அனந்த நாராயணன் சர்மா ஆதியோர் சிறப்பாக நிகழ்ச்சியை மேலும் மெருகூட்டி இருந்தனர்.

## 4 ஜனாதிபதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பப்ரலின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்ட விவாதம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளதுடன், இதில் சஜித் பிரேமதாச, நாமல் ராஜபக்ஷ, திலித் ஜயவீர மற்றும் அரியநேத்திரன் ஆகிய ஜனாதிபதி யோர் கலந்துகொள்ளவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் செய்தியாளர் சந்திப்பொன்றிலேயே ரோஹண ஹெட்டியாராச்சி இதனை கூறியுள்ளார்.

இதன்போது பப்ரலின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி மேலும் கூறுகையில், 'ஜனாதிபதித் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு மார்ச் 12 இயக்கத்தால் ஜனாதிபதி வேட்பாளர்களுக்காக விவாதங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன' என்றும், 'அனைத்துஊடகங்கதுளின்ஊடாகவும் இந்த விவாதம் ஒளிபரப்பாகவுள்ளது' என்றும் தெரிவித்தார்.

'இதன் முதலாவது விவாதம் நாளை 7ஆம் திகதி மாலை 3 மணி முதல் 5 மணி வரையிலும் நடக்கவுள்ளது. நான்கு வேட்பாளர்கள் தமது வருகையை உறுதிப்படுத்தியுள்ளனர்' என்று தெரிவித்ததார் பப்ரலின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி.

'சஜித் பிரேமதாச, நாமல் ராஜபக்ஷ,திலித்ஜயவீரமற்றும்அரியநேந்திரன் ஆகியோர்இதில்கலந்துகொள்ளவுள்ளனர் என்பதையும் அவர் உறுதிப்படுத்தினார்.

'மேலும் பல வேட்பாளர்கள் அடுத்துவரும் விவாதங்களில் கலந்துகொள்வார்கள் என்று நினைக்தூகின்றோம்' என்றும், 'இரண்டாம் கட்டத்தில் 6 வேட்பாளர்களும், மூன்றாம் நாளில் 6 வேட்பாளர்களும் என 16 வேட்பாளர்கள் பொது மேடையில் விவாதத்தில் கலந்துகொள்ளவுள்ளனர். இதனுடாக அனைத்து வாக்காளர்களும் யாருக்குவாக்களிப்பதுஎன்பதுதொடர்பில் நிலைப்பாட்டை பெற்றுக்கொள்ள முடியுமாக இருக்கும் என்று கருதுகின்றோம்' என்றும் பப்ரலின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

## அநுர குமார.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலந்து கொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், பச்சை யானைகளும், சிவப்பு யானைகளும் இன்று ஒன்றிணைந்துள்ளன. அதனை ஜனாதிபதி ரணில் தனது பேச்சில் வெளிப்படுத்தியுள்ளார்.

ரணிலுக்கு வெற்றி பெறுவதற்கு எந்தவொரு வாய்ப்பும் இல்லை. எனவே உங்களது வாக்குகளை வீணடிக்காமல் நாட்டைக் கைட்டியெழுப்புவதற்கான ஆணையை ரணசிங்க பிரேமதாசவின் புதல்னான என் தலைமையிலான குழுவுக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அநுரவுக்கு வாக்களிக்க இருப்போர், அவருக்கு வழங்கப்படும் ஒவ்வொரு வாக்குகளும் கள்வர்களைப் பாதுகாக்கும் குழுவுக்காக வாக்குகள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஊடகங்களிலும் அவ்வாறு தான் அவர்களுக்கு இடமளிக்கப்படுகிறது. நாம் வெற்றி பெற்று விடுவோம் என்று அவர்கள் அஞ்சுகின்றனர். எனவே தான் இன்று ரணில் – அநுர ஒப்பந்தம் மிகத் தெளிவாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மக்களை முட்டாள்கள் எனக் எண்ணிக்கொண்டு அவர்கள் செயற்படுகின்றனர். எனவே 220 இலட்சம் மக்களிடமும் கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஆணையை எமக்கு வழங்குங்கள். தாய் நாட்டை நாம் கட்டியெழுப்புவோம். அதில் எந்த சந்தேகமும் வேண்டாம்' என்றார்.

## 4 பேர் கொண்ட ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆணை தற்போது வெற்றிடமாகவுள்ளது என தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தேசிய மக்கள் சக்தி உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் என தெரிவித்து புதிய பாராளுமன்றம் தெரிவு செய்யப்படும்வரை அமைச்சரவைகுறித்த கேள்வி எழுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

இடைக்காலத்தில் நாங்கள் அரசமைப்பின் அடிப்படையில் நாட்டை ஆட்சி செய்வோம் எனத் தெரிவித்துள்ள இவர் 'நான் ஜனாதிபதியானால் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை கட்சியின் மற்றுமொருவருக்கு வழங்குவேன், அரசியலமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி நானும் எங்கள் கட்சியின் மூவரும் சேர்ந்து நான்குபேர் கொண்ட அமைச்சரவையை அமைப்போம்' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஏற்பாடு ஏற்றுக்கொள்ள முடியாதது என்றால் அரசியலமைப்பின் அனைத்துஅமைச்சுப்பொறுப்புகளையும் தன்கீழ் கொண்டுவருவதற்கு ஜனாதிபதிக்கு அனுமதி வழங்குகின்றது. அதுவும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் என்றால் நாங்கள் காபந்து அரசாங்கத்தை ஏற்படுத்துவோமென அவர் தெரிவித்துள்ளார்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.09.2024இல் வெளியிடப்பெற்றது.